Registered as a News Paper in Sri Lanka: பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஸூ ஐப்பசி மீ உ 22 வியாழக்கிழமை (08 - 11 - 1990) ஹிஜ்ரி 1411 ர. ஆகிர். 19 ஓசை 254

## இரண்டாம்தர அதிபர் தெரிவில் பாரபட்சம்

1988 ஆம் ஆண்டு இடம் பெற்ற அதிபர்களுக்கான பதவி உயர்வுத் தேர்வுப் பரீட்சையில் அனுபவமுள்ள பல மூன்றாம்தர அதிபர்கள் சித்தியெய்தியும் இரண்டாந்தர அதிபர்களுக்கான பதவியுயர்வின் போது பாரபட்சம் காட்டிப் புறக்கணிக்கப் பட்டுள்ளனர். இருபது வருடத்திற்குமேல் அனுபவமுள்ள மூன்றாந்தர அதிபர்கள்கூட நேர்முகத் தேர்வுக்குச் சமுகந்தந்த பின்பும் இரண் (4ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய முன்னணி கவிழ்ந்தது!

# பிரதமர் வி.பி.சிங் இராஜினாமா!

டில்லி)

**இந்திய நாடாளுமன்றமான லோக்சபாவில்இடம்பெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பு தோல்வி கண்டதையடுத்து இந்தியாவின் எட்டாவது பிரதமரான விஸ்வநாத் பிரதாப் சிங் இராஜினாமாச் செய்தார்.**

நேற்றுக் காலை 11-00மணிக்கு ஆரம்பமான விசேட கூட்டத் தொடரில் ஒதுக்கப்பட்ட எட்டு மணித்தியாலங்களுக்கு மேலாக நடந்த காரசாரமான விவாதத்தின் பின் நடந்த வாக்கெடுப்பில்பிரதமர் வி. பி. சிங் அரசாங்கம் தோல்வி கண்டது.

நாடாளுமன்றத்தில் 496 உறுப்பினர்கள் நேற்றுப் பிரசன்னமாயிருந்தனர். இவர்களில் 346 பேர் திரு. வி.பி சிங்கிற்கு எதிராக வாக்களித்தனர். 142 பேர் வி. பி. சிங் மீது நம்பிக்கை தெரிவித்து ஆதரவாக வாக்களித்தனர். 8 பேர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

பாரதிய ஜனதாக் கட்சி, இந்திரா காங்கிரஸ், அ. இ. அ.தி.மு.க., தேசிய மாநாட்டுக் கட்சி உட்பட ஜனதா தளத்தின் சந்திரசேகர், தேவிலால் குழுவினர் வி. பீ. சிங்கிற்கெதிராகவாக்களித்தனர். ஜனதா தளக்கட்சியும், இடதுசாரிக் கட்சிகளும் வி பி. சிங்கிற்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

(4ஆம் பக்கம் பார்க்க)



## மனசாட்சிக்கு அமைய உறுப்பினர்கள் வாக்களிக்க முன்வரவேண்டும் -வி. பி. சிங்

தேசிய முன்னணி அரசின் மீது நம்பிக்கை கோரும் தீர்மானம் மீதான வாக்கெடுப்பின் முக்கிய நோக்கம் நாட்டில் மதச்சார்பின்மை, ஜனநாயகம், தேசிய ஒருமைப்பாடு என்பனவற்றைக் கட்டிக் காப்பது தொடர்பானதே யார் எந்தப் பக்கம் இருக்கிறார்கள் என்பதற்கு அமைய வாக்களிக்காமல் அரசியல் சாசனத்துக்கு அமைய உறுப்பினர்கள் தங்கள் மனசாட்சிக்கமைய வாக்களிக்க வேண்டும் இவ்வாறு நேற்று நாடாளுமன்ற மக்கள் அவைக்கூட்டத் தொடரில் பேசுகையில் பிரதமர் வி.பி. சிங் தெரிவித்தார்.

ஒருமணி நேரம் நீடித்தபேச்சில் அவர் தொடர்ந்து கூறியதாவது:

நாடாளுமன்றத்தில் மக்கள் அவையில் எதிரணியினர் இந் (4 ஆம் பக்கம் பார்க்க)

### ராஜீவ்

மண்டேல் ஆணைக்குழு பரிந்துரைகள் விசயத்தில் நூற்றுக் கணக்கான இளைஞர்கள் உயிரிழந்தார்கள் இதைப் பிரதமர் வி. பி. சிங் பார்த்துக் கொண்டு மௌனியாக இருந்தார் என எதிர்க் கட்சித்தலைவரான ராஜீவ் காந்தி பேசுகையில் குறிப்பிட்டார்.

பிரதமர் நாட்டில் வகுப்பு (4 ஆம் பக்கம் பார்க்க)

### தேவிலால்

தேவிலால் பேசும்போது, வகுப்பு இனக்கலவரங்கள் நாட்டில் ஏற்படுவதற்குச் சிங் தான் காரணம் என்றார். ரத யாத்திரையை அதன் ஆரம்ப கட்டத்திலேயே தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும். அதைச் செய்யாமல் இறுதிக் கட்டத்தில் நடவடிக்கை மேற்கொண்டமை தவறு என்றார்.

### மதுதண்டவதே

1979 இல் நடந்தவற்றை எண்ணிப்பார்க்கும்படி வி.பி. சிங்கின் நம்பிக்கை மீதான பிரேரணையில் பேசிய நிதி அமைச்சர் பேராசிரியர் மது தண்டவதே கூறினார். இந்திரா காங்கிரஸின் ஆதரவை நாடி அதனுடன் சந்திரசேகர் அணி கூட்டுச்சேர்வது மக்கள் வழங்கிய தீர்ப்புக்கு மாறான செயலாகும் என்று மதுதண்டவதே தெரிவித்தார்.

### இந்திரஜித் குப்தா

மதச்சார்பின்மை, ஜனநாயகம், சமூக சகோதரத்துவம் ஆகிய ஜனதாதள் கட்சியின் கொள்கைக்காகவே தமது கட்சி தேசிய முன்னணி அரசாங்கத்தை ஆதரிப்பதாக கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் இந்திரஜித் குப்தா நம்பிக்கைப் பிரேரணை மீதான விவாதத்தின்போது தெரிவித்தார்.

### சந்திரசேகர்

வி. பி சிங் நாட்டைச் சீர்குலைவுக்குக் கொண்டு வந்து விட்டார். தேர்தல் நடந்தால் இரத்தக் களரிதான் ஏற்படும். மாற்று அரசு அமைவதற்கான வகையில் வழியமைய வேண்டும். பாபர் மசூதி, ராமஜென்மபூமி தொடர்பாக பிரதமர் அவசர கோல முடிவுகளை மேற்கொ (4ஆம் பக்கம் பார்க்க)

### அத்வானி

பாரதீய ஜனதாக்கட்சித் தலைவரான அத்வானிநேற்று நடந்த நம்பிக்கைத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசுகையில், சமூகநீதியே தமது கட்சியின் கொள்கை என்றார். அவர் மேலும் கூறியதாவது எல்லா நடவடிக்கைகளிலும் அரசாங்கம் தோல்வியைத் தழுவியுள்ளது. நீதிமன்றினால் (4ஆம் பக்கம் பார்க்க)

## வலிகாமம் வடக்கில் 2 மணிநேர ஹெலி தாக்கு

(தெல்லிப்பளை)

வலிகாமம் வடக்குப் பகுதியில் நேற்றுக் காலை இரண்டு மணி நேரம் தொடர்ச்சியாக ஹெலி ஒன்று தாக்குதலை நடாத்தியது.

நேற்றுக்காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணிவரை தொடர்ச்சியாக கொல்லன் கலட்டி, மாவிட்டபுரம், வீமன் காமம், கட்டுவன், வறுத் தலைவிளான், தெல்லிப்பளை ஆகிய பகுதிகளை நோக்கி ஹெலி ஒன்று கலிபர் தாக்குதலையும், றொக்கற் தாக்குதலையும் நடாத்தியது. இடையிடையே கிரனைற் தாக்குதல்களையும் நடாத்தியது. இதனால் மாவிட்டபுரம் பகுதியில் உள்ள சில வீடுகள் சேதமடைந்தன. இதே வேளை பலாலி, காங்கேசன்துறை ஆகிய முகாம்களிலிருந்து இப்பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (ச)

## தமிழ் மக்கள் அச்சம்; படுவான்கரையில் தஞ்சம்

(மட்டக்களப்பு)

காத்தான்குடி, காங்கேயன் ஓடை, பாலமுனை ஆகிய இடங்களிலுள்ள முஸ்லிம் ஊர்காவற் படையினர் சிறிலங்கா அரச படையினருடன் இணைந்து மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் மக்களைப் படுகொலை செய்யும் சம்பவங்கள் தற்போது அதிகரித்துள்ளன.

இதன் காரணமாகப் பீதியடைந்த தமிழ் மக்கள் படுவான்கரைப் பகுதியில் தஞ்சமடைந்துள்ளார்கள். (மு)

## போராளிகளுக்கு அஞ்சலி

(வடமராட்சி)

கடந்த சனிக்கிழமை மாவட்டபுரம் மினிமுகாம் தகர்ப்பின்போது வீரமரணமடைந்த பெண் புலிகளான மேஜர் சஞ்சிகா (கரவெட்டி), கப்டன் அருந்ததி (அரியாலை), லெப்டினன்ட் காஞ்சனா (வல்வெட்டித்துறை) ஆகியோரின் புகழுடம்புகள் மக்கள் அஞ்சலிக்காக வல்வெட்டித்துறை பருத்தித்துறை, நெல்லியடி ஆகிய இடங்களில் வைக்கப்பட்டன. நெல்லியடியில் இம் முகாம் தகர்ப்பின்போது வீரமரணமடைந்த வீரவேங்கை பாஞ்சாலன் (கரணவாய்) புகழுடம்பும் வைக்கப்பட்டது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜேர்மன் செல்லும் சிறுவர்கள் முறைகேடாகப் பயன்பாடு

(லண்டன்)

இலங்கையில் இருந்து ஜேர்மனி செல்லும் சிறுவர்களை முறைகேடான வேலைகளுக்கு அந்நாட்டின் சில காடையர்கள் பயன்படுத்துவதாக லண்டனில் உள்ள தமிழ் அகதிகளின் பராமரிப்பு அமைப்பு (TRAG) கூறியுள்ளது.

இலங்கையில் இருந்து 18 வயதுக்கு கீழ்ப்பட்ட சிறுவர்கள் அனுமதிப்பத்திரம் இன்றி ஜேர்மனிக்குள் நுழையலாம் என்பதை வைத்து இலங்கையில் உள்ள தமிழ்ப் பெற்றோர் தமது பிள்ளைகளை வெளிநாட்டிற்கு அனுப்புவதாகவும், இவ்வாறு அனுப்பப்படும் பல சிறுவர்கள் ஆதரவின்றி ஜேர்மனிய காடையர்களினால் பிடிக்கப்பட்டு தமது வேலைகளை பழக்குகின்றனர்.

இதனால் ஜேர்மனியர்கள் இரண்டு வித லாபத்தை பெறுகின்றனராம் என்றும் அந்த அமைப்புக் கூறியது. குறைந்த விலையில் வேலைவாங்குவது குற்றஞ்சாட்டப்பட்டு கைதாகும் போது தாம் தப்புவது என்பதாகும்.

பொதுத் தொலைபேசிகளில் உள்ள பணத்தை எடுப்பது, புகையிரத நிலை (4 ஆம் பக்கம் பார்க்க)

## சேத விபரங்களை சேகரிக்க அரச அதிபர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற்போது இடம் பெற்றுவரும் விமானக்குண்டு வீச்சு, பீரங்கித் தாக்குதல்கள், தீவைப்பு, கொள்ளை போன்ற அனர்த்தங்களால் சேதமடைந்த தனியார் சொத்துக்களைமதிப்பீடு செய்து கிராமசேவையாளர் மூலம் பெற்றுக் கொள்வதற்கு யாழ். அரச அதிபர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இவ்வளவு காலமும் இத்தகைய அழிவு நடவடிக்கைகளால் சேதமடைந்த அரச கட் (4 ஆம் பக்கம் பார்க்க)

## இளம்பெண் தற்கொலை

(அளவெட்டி)

குடும்பத்தகராறு காரணமாக இளம் குடும்பப்பெண் ஒருவர் அலரி விதையை உட்கொண்டு மரணமானார்.

பலநாட்களாகக் குடும்பத்திலிருந்துவந்த தகராறு முற்றியதால் இரண்டு பிள்ளைகளின் தாயாரான அளவெட்டி தெற்கைச் சேர்ந்த சாந்தினி (வயது 23) என்பவரே நேற்றுக்காலை இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார். (ச)

# நோயாளர் உதவிப்பணம் வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கசம், புற்றுநோய், தொழு நோய் உள்ள நோயாளா களுக்கு வழங்கப்படும் உதவிப் பணம் அண்மையில் வழங்கப் பட்டது.

முன்பு தபாலகங்கள் ஊடாக கசநோயாளர்களுக் கும், புற்று நோய்க்குட்பட்ட வர்களுக்கும், தொழுநோய் நோயாளருக்கும் வழங்கப் பட்டுவந்த உதவிப் பணம் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் வாழும் இந்த நோயாளர்களுக்குக் கிடைக்கும் வகையில் அந்தந்த பிரிவு உதவி அரசாங்க அதி பர்களுக்கு அண்மையில் சமூக சேவைகள் பகுதி உதவிப் பணிப்பாளரினால் யாழ். செயலக ஒன்று கூடல் மண்ட பத்தில் வைத்து வழங்கப்பட் டது.

இந்த உதவிப் பணம் வழங் கப்பட்டது பற்றி சமூகசேவை உதவிப் பணிப்பாளர் கூறுகை யில்யாழ்.மாவட்டத்தில்உள்ள மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கான கொடுப் பனவு செய்வதற்கு இப்பொ ழுது தமது பிரிவில் பணம் இல்லை என்றார். இக் கொடுப்பனவுக்கென மாதாந் தம் தமக்கு 1.9 மில்லியன் ரூபா பணம் தேவை. இந்தத் தொகைப் பணத்தை இப் பொழுது கொழும்பு சென்றி ருக்கும் யாழ். அரச அதிபர் திரும்பியதும் அவர் குடா நாட்டின் தேவைக்கென திர வப் பணம் கொண்டுவந்தால் அதிலிருந்து பெற்றுத் தரப் படும் என்றும் கூறினார். (லோ)


விளம்பரம்

டில்கா வாச் வேக்ஸ்

DILKA WATCH WORKS

வாடிக்கையாளரின் வசதிக் கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி, ஆனைக் கோட்டையிலும் இல. 3 சித் தன்கேணி றோட், பண்டத் தரிப்பிலும் இயங்குகின்றது. சகல மணிக்கூடுகளும் றேடி யோக்களும் உத்தரவாதத் துடன் திருத்திக் கொடுக்கப் படும். சகல எலக்ரோனிக் பற்றறிகளும் விற்பனைக்கு உண்டு. (B-1554)

'நீமியா உரம்'

அதிக விளைச்சலுக்கு உத விடும் நீமியா உரம் மில்க் வைற் தொழிலகத்தின் ஒரு சாதனை உற்பத்தி. கிலோ பைக்கற் ரூபா 5-00. மொத்த மாக வாங்குவோருக்குவிசேட சகாயவிலை திருநெல்வேலி யிலும் இணுவிலிலும் அண்ணா கோப்பிக் கடையில் விற்பனை யாகிறது. மில்க்வைற்-யாழ்ப் பாணம். (B-1564)

'முடிவல்ல ஆரம்பம்'

மீரா வெளியீடு சிதம்பர திருச்செந்திநாதன் எழுதி யது. 'இங்கு சண்டை பிடிக் காட்டி எங்களை வெளிநாட் டில இருக்க விடுவான்களே' இப்படிச் சொல்லும் சுயநல மனோபாவமுடைய கந்த சாமியை இந்நாவலில் சந்தி யுங்கள். துர்க்கா ஸ்ரேஷ னேர்ஸ் சுன்னாகம், திருக் கணிதம் சாவகச்சேரி, ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர். (R-808)


## சிரமதான மூலம் வீதி திருத்தம்

(கல்லுண்டாய்)

கல்லுண்டாய் கொத்துக் கட்டி வீதியில் உடைந்திருந்த பாலம், அதனுடன் சேர்ந்த வீதி என்பன சிரமதான முறையில் திருத்தி அமைக் கப்பட்டுள்ளது.

இந்தத் திருத்த வேலையை நவாலி முரசொலி சனசமூக நிலையம், இப்பகுதி சிற்றா ரவை போன்றவை இப்பகுதி இளைஞர்களின் ஒத்துழைப் புடன் சிரமதான முறையில் திருத்தி அமைத்துள்ளனர். கடந்த சில நாட்களாக இப் பகுதியூடான போக்குவரத் துக்கள் பெருமளவில் தடைப் பட்டிருந்தன. (க)

# ஆங்கில மோகம் கௌரவமா?

ஈழநாதம்
ஆசிரியர்
அவர்களுக்கு,

கடந்த சில தினங்களுள் உங்களது விளம்பரப் பகுதி யில் ஆங்கிலத்திலான விளம் பரங்கள் இருந்ததை என்னால் அவதானிக்க முடிந்தது. சிலர் ஒரு காலத்தில் ஆங்கிலத்தில் தம்மைஅறிமுகப்படுத்துவதை கௌரவம் எனக் கருதிச் செயல்பட்டனர். ஆனால் ஆங்கிலம் தேவைகளுக்கும் அதன்பயன்பாடுகளுக்கும்அந்த அந்தஇடங்களில் பயன் படுத் தவேநாம்ஆங்கிலமொழியைக் கற்கிறோம்.

இன்று எமது மண்ணை, மொழியை, கலை, கலாசார த்தைப் பேணிப் பாதுகாக்க ஒரு போராட்டமே நடக்கின் றது. தமிழருக்கும் தமிழீழ மண்ணுக்கும் கருமமாற்ற வேண்டிய நேரத்தில் ஆங்கில த்தில் யாராவது தம்மை அறி முகப்படுத்த முனைவது எத் தன்மையைக் குறிக்கின்றது?

இன்று ஈழநாதம் உட்பட இங்குள்ள தமிழ்ப் பத்திரி கைகள் எல்லாம் தமிழீழ எல்லைக்குள் அதுவும் குறிப் பாக வடக்கில் மாத்திரமே விளங்குகின்றது. இங்கு தமிழ் தெரியாத எவருமே இருக்க முடியாது. ஆங்கிலத்திலான விளம்பரங்கள் ஒரு குறிப்பிட்ட சாராருக்கே கிடைக்கும் என்ப தும் உண்மை. இவ் விடய மானது என்னைப் போன்ற பலரது மன உணர்வுகளில் பல கேள்விகளைத் தான் தோற்றுவிக்கின்றது. இப்படி ஆங்கில மோகம் கொண்ட வர்களின் தாகத்திற்கு ஈழ நாதம் ஏன் ஒரு வடிகாலாக இருக்க வேண்டும்?

- க. கண்ணன்
பண்டத்தரிப்பு

மக்கள் மடல்

வடபிராந்திய போக்குவரத்துச்சபை

# 5,000 ஊழியர்களுக்கு மூன்று மாதச்சம்பளமில்லை

(பண்டத்தரிப்பு)

வடபிராந்திய போக்குவரத் துச்சபை ஊழியர்கள் சுமார் 5000 பேர் கடந்த ஆகஸ்ட் மாதத்திலிருந்து மூன்று மாத ங்களாக வேதனம் கிடைக்கா மல் வேதனைப் படுகின்றனர்.

இப்பிராந்திய அலுவலகத் தினகீழ் பணியாற்றிய சுமார் 125 சமயாசமய ஊழியர்கள் கடந்த ஜூன் மாதம்முதல் வேலையுமின்றி, வேதனமும் இன்றி வாழ வழியின்றி தவிக் கின்றனர். நீண்ட கால சமயாசமயஊழியர்கள் இன்று வேலையை இழந்தவர்களாக இருக்கின்றனர். (12)

# 50 ஆயிரம் வயல் நிலங்கள் தரிசு நிலங்களாக மாறுகின்றன

(மாங்குளம்)

முல்லைத்தீவில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையால் சுமார் ஐம்பதாயிரம் ஏக்கர் வயல் நிலங்கள் தரிசு நிலங் களாக மாறி வருகிறது.

இராணுவத்தினர் யூறியா. டீசல் போன்றவற்றை இப் பகுதிக்கு எடுத்து வருவதில் தடையேற்படுத்தியிருப்பதால் இப்பகுதியில் விவசாயச் செய்கை பாபெரிதும்திப்படை ந்துள்ளது.

தற்போது மண்ணெண் ணெய்க்கு ஏற்படுத்தி வரும் தடையால் உப உணவு உற் பத்திகளும் பாதிக்கபபடும் அபாய நிலை தென்படுகிறது.

இதனால் உணவுப் பஞ்சம் ஏற்படும். அச்சமும் எழுந்துள் ளது. (82)


## அறிவித்தல்

சகல உயர்தர வகுப்பு ஆசிரியர்களும் எதிர் வரும் 10.11.90 க்கு முன்னர் எம்மைச் சந்திக்கவும்.

இயக்குநர்

றேடியன்ற் கல்விநிலையம்

புங்கன்குளம் – அரியாலை (R-813)


## மருந்துக்குத் தட்டுப்பாடு

(மாங்குளம்)

முல்லைத்தீவு மருந்தகங் களில் போதிய மருந்துகள் இல்லாத நிலையால் ஆட் கொல்லி நோய்க்கு மக்கள் ஆளாகின்றனர்.

நட்டாங்கண்டல், ஒட்டு சுட்டான், ஒலுமடு, நெடுங் கேணி மருந்தகங்களில் போதிய மருந்துகள் இல்லாத தால் கிராமப்புற ஏழை மககள் ஆட்கொல்லிநோய்க்கு ஆளாவது அதிகரித்து வரு கிறது.

இந்நிலையால் கர்ப்பிணிப் பெண்கள் முதல் பச்சிளங் குழந்தைகள் வரை நோயி னால் பீடிக்கப்பட்டு குணம டைய முடியாமல் அவஸ்தைப் படுகின்றனர். (82)


## அறிவித்தல்

### பட்டப்படிப்புகள் கல்லூரி

விரிவுரைகள் வழமைபோல் 10. 11. 90 சனிக்கிழமை ஆரம்பமாகும் என்பதை சகல மாணவர்களுக்கும் அறியத்தருகிறோம்.

குறிப்பு: பேராதனைப் பல்கலைக்கழகப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தவறிய மாணவர்கள் தமது பல்கலைக்கழகப்பதிவேட்டுடன் சமுகமளிக்கவும்.

கிளை:
பட்டப்படிப்புகள் கல்லூரி
57/48 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

உதவிப்பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(B-1566)


## நான்குமாத சம்பளமில்லை

(கிளிநொச்சி)

இலங்கை போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி சாலை ஊழியர்களுக்கு கடந்த 4 மாதங்களாகச் சம்பளம் வழங் கப்படவில்லை. அதனால் அவர்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்குகிறார்கள்.

அரசாங்கம், செஞ்சிலுவைச் சங்கம் போன்றவை வழங்கும் உலர் உணவு நிவாரணப் பொருள்களையாவது தமக் கும் வழங்கும்படி சம்பந்தப் பட்டவர்களுக்கு மேற்படி சாலை ஊழியர்கள் விண்ணப் பித்த போதும் அவைகூடத் தமக்குக் கிடைக்கவில்லை என அவர்கள் புகார் செய் துள்ளனர்.


## புதிய உயர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

### 10. 11. 1990 மீண்டும் ஆரம்பம்

- 90, 91, 92 A/L கலை, வர்த்தக வகுப்புக்கள்
- 90, 91 G. A. Q வகுப்புக்கள்
- 90, 91 B. A வகுப்புக்கள்

யாவும் அன்றைய தினம் ஆரம்பமாகும்.

10. 11. 90 (சனிக்கிழமை) காலை 8.00 மணிக்கு எமது நிலைய மாணவர்கள் அனைவரையும் சமுக மளிக்குமாறு வேண்டுகின்றோம்.

நிர்வாகி

திருமதி ஸ்ரீ. அருள்நங்கை

(B-1567)


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### கோட்டை சுக்ளா

(கதிரிப்பிள்ளை ஸ்ரீநந்தகுமாரன்)

சிறுப்பிட்டி

தாயின் மடியில் 02-06-1968

தாயக மண்ணிற்காக 08-11-1988

சமர்க் களத்தில் பலியான
வீரவேங்கைகள் — எம்மை
ஆளாத் துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத் துயில் கொண்டு
வீரமரணமடைந்தனரே!
தமிழினத்தின் தன்மானத் தனயனே!
தமிழ் மக்களின் விடிவிற்காய்
தமிழீழ மண்ணில் மலர்ந்த மலரே!
உன்னை அரக்கர் அழித்திட்டாலும்
உனது இலட்சியத்தை
என்றென்றும் அழிக்கவே முடியாது!

சிறுப்பிட்டி தெற்கு,
08. 11. 1990

பெற்றோர், சகோதர
சகோதரிகள், உறவினர்கள்.

(B. 1565)

## சிந்தனைக்கு

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே.

— அதிவீரராம பாண்டியர்
(நறுந்தொகை)


# ஈழநாதம்

81, வைமன்வீதி, யாழ்ப்பாணம் 08-11-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


## கல்வியில் ஒரு வெற்றிடம்; அனுமதிக்கலாகாது

யாழ். மாவட்டத்தில் குறிப்பாக மக்கள் செறிந்து வாழும் வலிகாமப்பகுதியில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு சில வாரங்கள் கடந்துவிட்டன ஆனால், மாணவர்கள் வருகை மிகவும் குறைந்தளவிலேயே இருப்பதாகத் தெரிகின்றது. இதற்கு யுத்தச் சூழ்நிலையும், பாதுகாப்பு இன்மையும் காரணங்களாகத் தெரிவிக்கப்படுகின்றன.

இன்று நடைபெறும் யுத்தம் தமிழரின் சுயநிர்ணய உரிமை கிடைக்கப் பெறும்வரை ஓயப்போவதில்லை. ஆகையினால் இந்தப் போராட்டம் குறுகிய காலத்திலும் முடியலாம். சிலவேளை பல வருடங்கள் நீடிக்கலாம். அதனை எமது போராட்டத்தின் தீவிரம், சிறிலங்காவின் நிலைவரம், சர்வதேச நிலைவரம் என்பன தீர்மானிக்கும் கருவிகளாகவுள்ளன.

இந்த நிலையில், யுத்தச் சூழல், பாதுகாப்பின்மை என்பனவற்றைக் காரணமாகக் கொண்டு மாணவர்கள் கல்வியைப் புறக்கணிப்பதோ, அல்லது பெற்றோர்கள் அதற்குரிய ஊக்கத்தைக் கொடுக்காமலோ விடுதல் தவறான நடவடிக்கையாகும். எவ்வாறு போராட்டத்தின் மத்தியில் வாழப் பழகிவிட்டோமோ, அதேபோன்று போராட்டத்தின் மத்தியில் கல்வியைப் பெறவும் பழகிக் கொள்ள வேண்டும். போராட்டம் முடியட்டும், பாதுகாப்பு ஏற்படட்டும். பின்னர் கல்வியைப் பெறலாம் என்றால் பிள்ளைகளின் கல்வியில் பெரியதொரு வெற்றிடம் ஏற்படப்போவது தவிர்க்கமுடியாத அம்சமாகப் போய்விடும். பின்னர் அந்த வெற்றிடத்தை நிரப்புதலும் சாத்தியமற்றதாகப் போய்விடும்.

இந்த நிலையில், பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்புவதும் அவர்கள் கல்வியைப் பெற வழி செய்வதும் பெற்றோர்களது கடமையாகும். அதேவேளை வீட்டில் பாதுகாப்பு சம்பந்தமான ஏற்பாடுகளை எவ்வாறு மேற்கொள்கின்றோமோ அதேபோன்ற பாதுகாப்பை பாடசாலையிலும் செய்து கொடுப்பதற்கு உதவுதலும் வேண்டும். பாடசாலைக்கு அனுப்பிவிட்டோம். பாதுகாப்பு ஆசிரியர்களுடையதும், கல்வித் திணைக்களத்தினுடையதும் என்று இல்லாமல், பெற்றோர்களும் பிள்ளைகளின் பாதுகாப்பிற்கு ஏற்ற வழிமுறைகளை ஆசிரியர்களுடன் சேர்ந்து செய்ய வேண்டும்.

இதேவேளை, தற்பொழுது கல்வி முக்கியமல்ல. இக்கல்வி ஒன்றிற்கும் உதவாது என்ற ஒரு கருத்து நிலவுதாகவும், இதனால் பாடசாலைகள் இயங்குவதற்கு தடைகள் விதிக்கப்பட்டுள்ளன என்பது போன்ற வதந்திகளும் உலாவுகின்றன. ஆனால் இன்று நடைமுறையில் உள்ள கல்விக் கொள்கை போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு எந்தவிதமான பயனையும் பெரியளவில் வழங்கவில்லை என்ற கருத்தே பரவலாக முன்வைக்கப்பட்டதே ஒழிய கல்வியே வேண்டாம் என்ற கருத்து எவராலும் முன்வைக்கப்பட்டதாக எமக்குத்தெரியவில்லை. அதாவது தொழில் நுட்பம் சாராத, உற்பத்தித்துறையுடன் சம்பந்தப்படாத இடைநிலைக் கல்விக்கு மாற்றீடாக போராட்டத்திற்கு உறுதுணையாகவும், உற்பத்தியுடனும் தொடர்புடைய கல்விக் கொள்கை வேண்டும் என்ற கருத்தே முன்வைக்கப்பட்டது.

ஆகையினால் இன்றைய சூழ்நிலையில், தேவைக்கேற்ற கல்விக் கொள்கை, சூழ் நிலைக்கேற்ற நடத்தை, நேரத்திற்கேற்ற பாடவிதானம் என்பனவற்றை வழங்குவதில் ஆசிரியர்களும், கல்வி அதிகாரிகளும் கவனம் செலுத்தவேண்டும். அதாவது இன்றைய போராட்ட தேவைக்கேற்றவிதத்தில் கணிதம், விஞ்ஞானம் உட்பட சகல பாடங்களும் போதிக்கப்படக் கூடிய கல்விக் கொள்கையும், சண்டை, குண்டு வீச்சு என்பனவற்றிற்கேற்ப பாடசாலை நேரங்களில் மாற்றம் செய்தல் என்பனவற்றோடு குறுகிய காலப்பகுதியில் மாணவர் நன்மை பெறக்கூடியதாகக் கற்பிக்கக் கூடிய பாடவிதானங்களும் தேவை.

அதாவது ஒரு வருடத்திற்குரியகல்வியை சிலமாதங்களில் மாணவர்களுக்குப் போதிப்பதைவிட எதிர்காலத்திற்குரிய பாடங்களையும் உலக நடத்தைகளையும் புரிந்துகொள்ளக் கூடியதான விதத்தில் பாடவிதானங்களை ஒழுங்கமைத்தல் முக்கியமானதாகும். அவ்வாறானால்தான் இத்தகைய நெருக்கடியான சூழ்நிலையில் மாணவர்களுக்கு கல்வியை வழங்கமுடியும்.

அதாவது போராட்டச் சூழலில் வளரும் எமது அடுத்த சந்ததிகளுக்கு கல்வியில் ஒரு வெற்றிடம் ஏற்பட்டு விடக் கூடாது. இந்த வெற்றிடம் ஏற்படாமல் பாதுகாப்பது பெற்றோரதும் ஆசிரியர்களினதும் கல்விஅதிகாரிகளினதும் கடமையாகும்.

## உதிக்கும் திசை நோக்கி உன்னத பயணம்...



7

இராணுவ முகாமுடன் இணைந்ததாக அல்லது அருகில் இந்த அகதி முகாம்கள் இருப்பதால் எப்போதும் மரண பயத்துடனேயே வாழ வேண்டியுள்ளது. இராணுவத்தினரின் அல்லது முஸ்லிம் ஊர்காவல் படையினரின் 'மூட்' எப்படியிருக்கும் என்பதைப் பொறுத்தே தமது வாழ்வு நிர்ணயிக்கப்படுகின்றது என்றார். 'எங்கேயாவது ஏதாவது பிரச்சினை நடந்தால் அகதிமுகாமுக்குள் வந்து அப்போது தாங்கள் தீர்மானிக்கும், அல்லது ஏற்கனவே அவர்களின் தீர்மானத்தில் உள்ளவர்களைக் கைது செய்து கொண்டு போய்விடுவார்கள். முன்னரெல்லாம் இவர்களை பூஸாவுக்கோ, வெலிக்கடைக்கோ கொண்டு செல்வார்கள். இப்போது கொண்டு செல்லப்படுபவர்கள் உயிருடன் திரும்புவதில்லை என்றார். கதை இங்கேயே முடிந்துவிடுகிறது என்றார். சிலவேளை பலர் ஊர்காவல் படையால் அல்லது இராணுவத்தால் தாக்கப்படுவார்கள். இதைத்தான் செய்கிறார்கள் என்றால் பெண்கள்மீது இவர்கள் இழைக்கும் கொடுமைதான் கடவுளுக்கே பொறுக்காது' என்றார்.

முதன்முதல் சுங்கான் குழியைச் சேர்ந்த ஞானசேகரம் பகவதிப்பிள்ளை என்ற பெண்ணை முஸ்லிம் ஊர்காவல் படையினர் கற்பழித்தார்கள். 2-8-90இல் சீனன் குடாவில் சசி என்றபெண்ணை சிங்கள ஊர்காவல் படையினர் கற்பழித்தார்கள் என்றார். தொடர்ந்து 'அகதி முகாமுக்குள் முஸ்லிம் ஊர்காவல் படையினர் வருவார்கள். இந்த அகதிமுகாம்கள் மேலே கிடுகினால் வேயப்பட்டும் சுற்றிவர படங்கினால் கட்டப்பட்டுமிருக்கும். படங்கை விலத்தி வருவார்கள் இவர்களைக் கண்டதும் பயத்தினால் பெண்கள் முகத்தைத் திருப்பி குப்புறப் படுப்பார்கள். டோர்ச் லைட்டை அடித்து முகத்தைக் காட்டு, முகத்தைக் காட்டு என்பார்கள். முஸ்லிம் ஊர்காவல் படையினர் தாங்கள் தீர்மானிக்கும் பெண்ணைக் கொண்டு போவார்கள். கொண்டுபோகும் பெண்களை உயிருடன் விடுவதில்லை. சிலவேளை முகாமுக்குள்ளேயே வைத்தும் கற்பழிப்பார்கள். சுற்றிவர குழந்தைகள் இருக்கும். கதறக் கதற ஒரு பெண்ணைக் கற்பழிக்கும்போது அதைப் பார்க்கும் குழந்தைகளின் மனோநிலை எப்படிப் பாதிக்கப்படும்? இதையெல்லாம் பார்த்துக்கொண்டு எப்படி அங்கு இருப்பது?' என்று கேட்டார்.

குடும்பங்களே சிதறிப்போய் விட்டன. பெரும்பாலான ஆண்கள் மனைவி, பிள்ளைகளை விட்டு முல்லைத்தீவுக்கு போய் விட்டனர். புதுக்குடியிருப்பில் சிலர் எண்ணெய் வியாபாரம் செய்கிறார்கள், வவுனியாவில் வாங்கி வந்து புதுக்குடியிருப்பிலோ யாழ்ப்பாணத்திலோ விற்கிறார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து திருமலைக்கு வரும் திருமலை மாவட்டப்போராளிகள் மூலமாகவும், திருமலையில் இருந்து யாழ்ப்பாணம் செல்பவர்கள் மூலமாகவும்தான் யார் யார் உயிருடன் இருக்கிறார்கள்; முகாமில் என்ன நடக்கிறது? என்பதைத் தெரிந்து கொள்ள முடியும் என்றார். 'எந்த ஊர் மக்கள் புதுக்குடியிருப்பில் இருக்கிறார்கள்?' என்று கேட்டேன். 'பெரும்பாலும் தம்பலகாமம் ஆட்கள்தான் அங்கே இருக்கிறார்கள்' என்றார். பெண்களைக் கொண்டு போகும் போது தமிழீழம்தானே கேட்டீர்கள். எல்லாம் கிடைக்கும் வாருங்கள் என்று முஸ்லிம் ஊர்காவல் படையினர் கூறுவார்கள் என்று குறிப்பிட்டார்கள். (கோவில் குடியிருப்பைச் சேர்ந்த கந்தசாமி என்பவருடைய 18 வயது மகள் 15-10-90 அன்று இவ்வாறு பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டதாகவும், இலங்கை போக்குவரத்துச் சபையில் கடமையாற்றும்பாக்கியராசா என்பவரின் மகளை முஸ்லிம் ஊர்காவல் படையினர் தோளில் போட்டுக் கொண்டு போனதாகவும், அவர் உயிருடன் திரும்பவில்லை எனவும் பின்னர் அறிந்தோம்.)

தங்களை அலங்காரம் செய்து கொள்ளும் இளம் வயதுப் பெண்பிள்ளைகளெல்லாம் தங்களை அசிங்கமாகக் காட்ட என்னென்ன மாதிரிக் கோலத்தை மாற்றிக் கொள்கிறார்கள் என்பதையும் விளக்கினார். தலை இழுக்காமல், முகத்தில் கரி பூசி... என்றெல்லாம் கூறினார். இந்தப் பிள்ளைகளுக்கெல்லாம் சகோதரங்கள் உண்டு ஆனபடியால் முகாமிலிருந்து கொண்டு செல்லப்பட்ட பெண்பிள்ளைகளின் பெயரைக் கேட்க வேண்டாம் என்று அவர் கேட்டுக் கொண்டார். (ஆரம்பத்தில் நிலைமையை இயல்பாகக் கதைத்தவர் பெயர்களை நான் குறிப்புப்புத்தகத்தில் குறித்ததும் நிறுத்திக் கொண்டார்)'எனக்கும்பெண் பிள்ளைகள் உண்டு. எங்களுடைய சமூக அமைப்பு இன்னும் மாறவோ, காலத்துக்கேற்ற மாதிரி வளர்ச்சியடையவோ இல்லை - நீங்கள் இந்தத்தர்மசங்கடமானநிலையை புரிந்து கொள்ள வேண்டும்' என்று அவர் வேண்டிக்கொண்டார்.

சரி ஆண்களுக்கு நடந்ததைக் கூறுங்கள் என்றேன். 5.9.90 அன்றுகந்தளாய் அகதி முகாமில் சித்திரவேல் கனகலிங்கம் என்பவர் இராணுவத்தால் தாக்கப்பட்டார். 9 9.90 அன்று தம்பலகாமம் அகதி முகாமைச் சேர்ந்த கந்தசாமி, ஐயாத்துரை ஆகியோர் முஸ்லிம் ஊர்காவல் படையால் கொலை செய்யப்பட்டு 98 ஆம் கொலனி வயல் வெளியில் பிணமாகக் கிடந்தனர். 96 ஆம் கொலனியைச் சேர்ந்த ஐயாத்துரை என்பவரும் அகதி முகாமிலிருந்து வெளியே செல்லும் போது கைது செய்யப்பட்டார். இவருக்கு வயது 57. மற்றும் முத்துக்குமாரு (மேற்கு - கொலனி 42 வயது) ராசதுரை (முள்ளியடி - 45 வயது), பேபி ராசா (மேற்கு - கொலனி - 28 வயது). சந்திரசேகரம் (நடுப்பன்திடல் - 36 வயது), ராசதுரையின் மகள் (முள்ளியடி – 13 வயது), கோணநாயகம் (கள்ளிமேடு - 32 வயது), ஜயா (மேற்குக்கொலனி - 28 வயது), சகோதரர்களான மேற்குக் கொலனி வாசிகளான 30 வயதான பாலகிருஷ்ணன் 26 வயதான கோபாலகிருஷ்ணன் இவர்களெல்லாம் இராணுவத்தினராலும் முஸ்லிம் ஊர்காவல் படையினராலும் 9 ஆம் மாதத்தில் பிடித்துச் செல்லப்பட்டவர்கள். ஆட்கள் அவ்வளவு தான்! என்றார்.

கிண்ணியாப் பக்கம் நிலைமை என்னமாதிரி? என்று கேட்டேன். கிண்ணியா, சின்னக்கிண்ணியாவைச் சேர்ந்த 86 குடும்பங்களைச் சேர்ந்த தமிழர்கள், முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்கருதி பணயக் கைதிகள் நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றார் எங்கே தடுத்துவைத்துள்ளனர்? என்றேன், கிண்ணியா நெற்களஞ்சியத்தில் தான் அந்தத் தடுப்புமுகாம் உண்டு. இவர்களைப்பற்றியும் கந்தளாயில் உள்ள அகதிகள் பற்றியும் அறிவது கொஞ்சம் கஷ்டம் என்றார்,

"சிங்களவரால் ஏதும்தொந்தரவில்லையா?" என்று கேட்டேன். தொந்தரவு இல்லையா? ஜோண் சில்வா என்று ஒருவன் இருக்கிறான்...... என்றவாறே தொடர்ந்தார்.

(தொடரும்)

> முஸ்லிம் ஊர்காவல் படையினர் சுற்றிவர இருக்கும் படங்கை விலத்தி வருவார்கள். இவர்களைக் கண்டதும் பயத்தினால் பெண்கள் முகத்தைத் திருப்பி குப்புறப் படுப்பார்கள். டோர்ச்லைட்டை அடித்து முகத்தைக் காட்டு, முகத்தைக் காட்டு என்பார்கள் முஸ்லிம் ஊர்காவல் படையினர் தாங்கள் தீர்மானிக்கும் பெண்களைக் கொண்டு போவார்கள். கொண்டு போகும் பெண்களை உயிருடன் விடுவதில்லை.

## ஜெயந்திநகர் மக்களுக்கு இதுவரை நிவாரணமில்லை

(கிளிநொச்சி)

வன்செயலால் பாதிக்கப்பட்ட ஜெயந்திநகர் மக்களுக்கு இதுவரை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட உலர் உணவு நிவாரணப் பொருள்கள் எதுவும் வழங்கப்படவில்லை.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கூடுதலான கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு பல தடவைகள் இந்த நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்ட போதும் ஜெயந்திநகர் மக்களுக்கு இதுவரை முதலாம் கட்ட உணவுப் பொருள்கள் கூட இதுவரை வழங்கப்படவில்லையாம்.

முன்பு இருந்த கிராமத்துப் பெரியவர்கள் தவறான புள்ளி விபரங்களைஅரசாங்கத்திற்கு கொடுத்ததாலேயே இந்தஉணவுப்பொருள்கள் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (49)

# பாடசாலைகளில் மாணவர் வரவு கணிசமான அளவில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரத்தில் உள்ள பெரும்பாலான பாடசாலைகளில் கடந்த இரு நாட்களாக மாணவர்களின் வரவு கணிசமான அளவு அதிகரித்து வருகின்றது. வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டு சீராக நடைபெற ஆரம்பித்துள்ளது.

கிராமப்பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களின் வரவு படிப்படியாக அதிகரித்து வருகின்றது யாழ். நகரில் உள்ள பாடசாலைகளைப் பொறுத்தவரை நேற்று மாணவர்களின் வரவு திடீரென அதிகரித்துக் காணப்பட்டது. யாழ். இந்துக் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, சென். பத்றிக்ஸ் கல்லூரி ஆகியவற்றில் மாணவர்களின் வரவு இருபத்தைந்து சத வீதத்திற்கும் மேலாக இருந்தது. சென். ஜோன்ஸ் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி போன்றவற்றில் முப்பது சத வீதத்திற்கும் மேற்பட்ட மாணவர்களின் வரவு இருந்தது.

வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரியிலும் மாணவர்களின் வரவு மிகவும் குறைவாக இருந்தது. எனினும் சகல பாடசாலைகளிலும் அடுத்துவரும் சில நாட்களில் மாணவர்களின் வரவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடுமையான சேதத்திற்குள்ளான யாழ். மத்திய கல்லூரியில் முழுமையான மாணவர்களின் வரவு இருந்தால், அதிகம் சேதமடையாத பாவிக்கக்கூடிய வகுப்பறைகளின் பற்றாக்குறை ஏற்படும் என்றும் இதற்கு மாற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இப்பாடசாலை அதிபர் கூறினார்.

தற்பொழுது பாடசாலைகளை சீராக நடத்துவதற்கு உருவாகியுள்ள சுமுகமான சூழ்நிலையை தொடர்ந்தும் பேணி மாணவர்களின் கல்வி வளர்ச்சியை சீராக்குவதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என்று பிராந்தியக் கல்விப்பணிப்பாளர் கருத்து வெளியிட்டுள்ளார்.

நேற்று யாழ். பல்கலைக் கழகத்திலும் எதிர்பார்த்ததை விட மாணவர்களின் வரவு மிகவும் திருப்திகரமாக இருந்ததாக பதிவாளர் பரமேஸ்வரன் கூறினார். (க)

## வசதியற்ற பல்க. மாணவருக்கு உலர் உணவு வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்திற்குத் தற்போது சமுகம் தந்திருக்கும் வசதியற்ற வெளிமாவட்ட மாணவர்கள் வேண்டிக்கொண்டதற்கிணங்க அம்மாணவர்களுக்கு நல்லூர் உதவி அரசாங்க அதிபர் ஊடாக உலர் உணவு உதவி வழங்க யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் தீர்மானித்துள்ளது என பல்கலைக்கழகப் பதிவாளர் க. பரமேஸ்வரன்தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் இதுபற்றித் தெரிவித்ததாவது:

மாணவர்களுக்கு வழங்கப்படும் இந்த உலர் உணவை தாமாகவே சமைத்தும் உண்ணலாம் அல்லது பல்கலைக் கழகச் சிற்றுண்டிச் சாலையில் கொடுத்து உணவாக்கியும் சாப்பிடலாம். அது அவர்களின் விருப்பம் என்றார்.

இந்த உலர் உணவை நல்லூர் உதவி அரசாங்க அதிபர் ஊடாக யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுக்க விருப்பதாகவும், இக்கோரிக்கையேற்கப்பட்டதும் உடனடியாக இந்த உலர் உணவு வழங்கும் திட்டம் அமுலுக்கு வரும் எனவும் அவர் கூறினார்.

இதுதவிர யாழ். பல்கலைக் கழகத்திலுள்ள வசதியற்ற வெளிமாவட்டங்களில் இருந்து வந்திருக்கும் மாணவர்களை உலர் உணவு பெற தகுதித் தன்மையைத் தெரிவு செய்யும்பொறுப்பை அந்தந்த மாவட்ட மாணவர் மன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

மேலும் பதிவாளர் இந்த மாணவர்களுக்கு ஏற்படும் இதர செலவுகளானகல்வி உபகரணங்கள் வாங்கும் செலவுகளுட்பட கைச் செலவுகளுக்கும் தேவையான பணத்தை பெற்றுக்கொடுப்பதற்குத் தாம் சில அரசசார்பற்ற நிறுவனங்களை நாடவுள்ளோம் என்றும்தெரிவித்தார். (லோ)

## தினமும் பராவெளிச்சம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாம் பகுதியிலிருந்து இரவுவேளையில் தினமும் பராவெளிச்சம் அடிக்கப்படுகிறது.

இந்த வெளிச்சம் நாவற்குழி வெளி, கோப்பாய் வெளி ஆகிய வெளிகளிற்கூட பிரகாசமான வெளிச்சத்தை உண்டுபண்ணுவது குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

## விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டன

(யாழ்ப்பாணம் )

ஜூன்மாதத்திலிருந்து விண்ணப்பித்திருந்த தேசிய அடையாள அட்டை விண்ணப்பதாரிகளின் 1882 விண்ணப்பப் படிவங்கள் கடந்தவாரம் ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

யுத்தச் சூழ்நிலையால் ஏற்பட்ட முத்திரைத்தட்டுப்பாடு காரணமாக ஜூன் மாதத்தில் இருந்து இவை சேர்த்துவைக்கப்பட்டு வந்தன என யாழ். செயலக ஆட்களைப் பதிவு செய்யும் அலுவலகத்திலிருந்து தெரியவருகிறது. (லோ)

### ஊர்காவற்துறை, காங்கேசன்துறை

## இலங்கை வங்கி கிளைகள் இடம்மாறி இயங்குகின்றன

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளினால் கடந்த சில மாதமாக இயங்க முடியாது இருந்த ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை ஆகிய இலங்கை வங்கிக் கிளைகள் தற்போது இடம் மாற்றப்பட்டு இயங்கி வருகின்றன.

ஊர்காவற்றுறை இலங்கை வங்கிக் கிளை நேற்று முதல் யாழ். ஸ்ரான்லி வீதி கிளையில் இயங்கஆரம்பித்துள்ளது. இந்த வங்கியின் ஆவணங்கள் நேற்று முன்தினம எடுத்து வரப்பட்டது இதனால் இங்கு முழுமையான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை இலங்கை வங்கிக் கிளை கடந்த திங்கள் முதல் மானிப்பாய் இலங்கை வங்கியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் இங்கு பென்சன் வவுச்சர்கள், வெளிநாட்டு காசோலைகள் ஏற்றுக் கொள்ளல் போன்ற மட்டுப்படுத்தப்பட்ட வேலைகள் மட்டுமே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை இலங்கை வங்கியின் எல்லா ஆவணங்களும், தளபாடங்களும் தற்பொழுது சிறிலங்கா இராணுவத்தின் பிடியில் சிக்கியுள்ளது. இவற்றை மீட்டுத் தரும்படி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் கேட்கப்பட்டும் இதுவரை இந்த ஆவணங்களை மீட்கும் முயற்சி வெற்றியளிக்கவில்லை. இதனாலேயே இந்த வங்கியின்முழுமையான செயற்பாடுகளை ஆரம்பிக்க முடியவில்லை என்று வங்கியின் முகாமையாளர் தெரிவித்தார். (க)

### அத்துவானி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிறிராமர் பிறந்த இடத்தைத் தீர்மானிக்க முடியாது ஆனால், மசூதியா?கோயிலா? எது முதல் வந்தது என்பதைத் தான் அதனால் தீர்மானிக்க முடியும்.

அரசாங்கம் ஒரு இடைக்காலத் தேர்தலை நடத்த முன்வர வேண்டும் என்றும் அத்வானி கருத்து வெளியிட்டார்.

### சந்திரசேகர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ண்டுள்ளார் என ஜனதாதளத்தில் இருந்து பிரிந்து சென்ற சந்திரசேகர் பேசும்போது தெரிவித்தார். காஷ்மீர், பஞ்சாப் பிரச்சனைகளையும் தீர்க்க அரசு தவறிவிட்டது என்று குற்றம் சாட்டினார்.

### ராஜீவ்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாதத்தை வளர்த்துப் பிளவைப் பெரிதாக்கியுள்ளார் என்றும் ராஜீவ் காந்தி வன்மையாகக் கண்டித்துப் பேசினார்.


### மனசாட்சிக்கு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரா காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடன் அரசாங்கம் அமைப்பதில் தவறில்லை. அரசை வீழ்த்துகிறவர்கள் அரசாங்கத்தை அமைக்க வேண்டும். பாரதீய ஜனதாக்கட்சி அரசாங்கத்தை அமைக்க முன்வருமா? தேசிய அரசொன்று அமைவதை ஜனதாதள் ஏற்றுக் கொள்ளும். ஆனால் பாரதீய ஜனதாக்கட்சி அதில் சேர்வதை ஏற்றுக்கொள்ளாது.

வி. பி. சிங் மேலும் தொடர்ந்து பேசுகையில் 11 மாத கால ஆட்சியில் அரசு பெரும்பான்மை பலத்தை இழந்து விட்டது. என்றாலும், மனச்சாட்சியின் படி வாக்களிக்க வேண்டும். பாமர் மசூதி, ராமர் ஜன்ம பூமி விவகாரத்தில் பாரதீய ஜனதாக் கட்சியின் போக்கு மக்கள் தீர்ப்புக்கு எதிரானது. அரசாங்கம் மண்டல் ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அமுலாக்கியமை சமூக நீதி நடவடிக்கையாகும் என்றார்.

மக்கள் அவையில் குற்றச் சாட்டுகளும், எதிர்க் குற்றச் சாட்டுகளும் தெரிவிக்கப் பட்டன.




## பிரச்சினை தீர்க்காவிட்டால் ஆயுதப் போராட்டம்

(கொழும்பு)

இலங்கையில் மூஸ்லிம் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணப்படவில்லை எனில் தாமும் ஆயுதப்போரில் இறங்க நேரிடும் என முஸ்லிம் இளைஞர் பேரவை எனும் முஸ்லிம் இயக்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஏற்கனவே 5000 முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதப் போர் நடாத்தத் தயாராகவுள்ளனர் என்றும், சுமார் 15,000 முஸ்லிம் இளைஞர்களை ஆயுதப் போருக்காகத் தம்மால் மேலும் திரட்ட முடியும் என்றும் முஸ்லிம் இளைஞர் பேரவைத் தலைவர் சுபேர் கூறியுள்ளார்.

மேலும் முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதப் போரில் இறங்க லிபிய நாட்டு அதிபர் கேர்ணல் முகமட் கடாபியிடம் இலங்கை முஸ்லிம் சமயத் துறை அமைச்சர் அஷ்ரப் ஆயுத உதவி கோரியுள்ளார் எனவும் கேர்ணல் கடாபி, இதுகுறித்து அக்கறையுடன் பரிசீலித்து வருவதாகவும் சுபேர் கூறினார்.

## தடுப்பூசி போடப்படவுள்ளது

(தெல்லிப்பளை)

குழந்தைகளுக்கான தடுப்பூசி நாளை காலை தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தில் வைத்துப் போடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே இதுவரை குழந்தைகளுக்குரிய தடுப்பூசி போடாதவர்கள் சமுகமளிக்கும்படி கேட்கப்படுகின்றனர். (ச)

### இரண்டாந்தர

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டாந்தர அதிபராகப் பதவி உயர்வு வழங்கப்படாமல்புறக் கணிக்கப் பட்டுள்ளார்கள்.

இந்த அநியாயத்தை ஆசிரியர் சங்கங்கள் கவனிக்குமா என்று பாதிப்புக்குள்ளான ஆசிரியர்கள் அங்கலாய்க்கிறார்கள். இந்த நியமனங்களில் சிலஅரசியல்வாதிகளும் கொழும்பில் கல்வி அமைச்சில் கடமையாற்றும் சில தமிழ்ப் பேசும் அதிகாரிகளும் தமது கைவரிசையைக் காட்டியுள்ளார்களாம்.

### சேதவிபரங்களை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டடங்களையும் மற்றும் பொதுஸ்தாபன கட்டடங்களையும்கூட மதிப்பீடு செய்துதம்மிடம் சமர்ப்பிக்கும்படி ஒவ்வொரு திணைக்களத் தலைவர்களிடமும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களிடமும் கோரியுள்ளார்.

பொதுமக்களின் சொத்துக்கள் சேதவிபரத்தை கிராம சேவகர்கள் அந்தந்த வீடுகளுக்குச் சென்று சேகரிப்பர் எனவும் தெரிகின்றது. (லோ)

### ஜேர்மன்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யத்தில் இருக்கும் தன்னியக்கி 'டிக்கட்' பெறும் இடத்தில் உள்ள பணத்தை களவாடுதல் போன்ற செயல்களுக்கு இந்தச் சிறுவர்களை பயன்படுத்துகின்றனர் என்றும் அந்த அமைப்பு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஜேர்மனிய அரசாங்கத்தால் நடத்தப்படும் சிறுவர்கள் பராமரிப்பு நிலையத்தில் 250 சிறுவர்கள் இருக்கிறார்கள் என்றும் தெரிவித்துள்ளது.

ஆகவே தமிழ்ப் பெற்றோர்கள் இத்தகைய நிலைக்கு தமது பிள்ளைகளை உருவாக்காமல் இருக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டது.

## சந்திக்க வேண்டுகோள்

முறைசாராக் கல்விப் பிரிவின் கீழ் நல்லூர் சாதனா பாடசாலையில் உணவு தயாரித்தல் துறையில் கற்கும் சகல மாணவர்களையும் எதிர்வரும் பத்தாம் திகதி சனிக்கிழமை காலை பத்து மணிக்கு மேற்படி பாடசாலையில் சந்திக்கும்படி இத்துறையின் போதனாசிரியர் கேட்டுள்ளார். (க)

## தொழிலின்றிப் பரிதவிப்பு

முல்லைத்தீவில் ஐயாயிரம் அகதிகள் தமது தொழில்களை இழந்து பரிதவிக்கின்றனர்.

இராணுவ நடவடிக்கையால் மாங்குளம், முல்லைத்தீவுப் பகுதி மக்கள் கடந்த மூன்று மாதங்களாகத் தமது நிரந்தரத் தொழில்களை இழந்து சொந்த இருப்பிடங்களையும் இழந்து தொடர்ந்தும் நிர்க்கதியான நிலையில் காணப்படுகின்றனர்.

இராணுவ நடவடிக்கையால் விவசாயம், மீன்பிடி, இளைஞர்களின் கல்வி நிலைகள் முழுக்கமுழுக்கப்பாதிப்படைந்துள்ளன. (82)

### போராளிகளுக்கு

இவ்வைபவத்தில் பெருந்தொகையான பொதுமக்கள் கலந்துகொண்டு மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தினர். அஞ்சலிக் கூட்டத்தில் யாழ். மாவட்ட மகளிர் முன்னணி பொறுப்பாளர் மாலினி, வடமராட்சிப் பொறுப்பாளர் சூசை, கரவெட்டிப் பொறுப்பாளர் குணபால் ஆகியோர் அஞ்சலி உரைநிகழ்த்தினர்.

### தேசிய முன்னணி

வி. பி. சிங் தான் பதவி விலகியதைத் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் கொள்கைக்காகப் பதவியைத் துறந்ததாகத் தெரிவித்தார். இதேவேளை மாற்று அரசாங்கத்தை அமைக்க முயற்சிக்கும் சந்திரசேகர் ''ஒரு அத்தியாயம் முடிந்து விட்டது'' என்றார். ராஜீவ் காந்தி கருத்து வெளியிடுகையில் நாடாளுமன்ற மக்கள் சபை ஒரு காரணத்துக்காகச் செயலாற்றியுள்ளது என்றார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள '' ஈழநாதம் '' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 08 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.